# TNPSC Tamil Current Affairs 3rd April 2017

**1. 2017 பெண்கள் ஒற்றையர் பிரிவில் "இந்தியா சூப்பர் சீரிஸ்" போட்டியை யார் வென்றது?**

A. Sung Ji-Hyun

B. P.V. Sindhu

C. Saina Nehwal

D. Carolina Marin

விடை : B. P.V. Sindhu

ரியோ ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற P.V. Sindhu, புது டெல்லியிலுள்ள சிறி அரங்கத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஸ்பெயின் வீரர் கரோலினா மரைனை 21-21, 21-16 என்ற செட் கணக்கில் தோற்கடித்து 2017 பெண்கள் ஒற்றையர் பிரிவில் "இந்தியா சூப்பர் சீரிஸ்" போட்டியை வென்றார். இதையடுத்து, டென்மார்க்கின் விக்ரர் ஆக்செல்சன், சீனாவின் தைபேயின் டின் சென் சௌவை நேரடி ஆட்டங்களில் தோற்கடித்து, ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றார்.

**2. உயர் கல்வி நிறுவனங்களுக்கான 2017 National Institutional Ranking Framework (NIRF)ன் தரவரிசையில் முதலிடம் பெற்றுள்ள நிறுவனம் எது?**

A. பெங்களூர் இந்திய அறிவியல் நிறுவனம்

B. இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை

C. இந்திய தொழில்நுட்பக் கழகம், மும்பை

D. இந்திய தொழில்நுட்பக் கழகம், கரக்பூர்

விடை : A. பெங்களூர் இந்திய அறிவியல் நிறுவனம்

2017 National Institutional Ranking Framework (NIRF)ன் தரவரிசையில் பெங்களூரிலுள்ள "பெங்களூர் இந்திய அறிவியல் நிறுவனம்", உயர் கல்வி நிறுவனங்களுக்கான ஒட்டுமொத்த தரவரிசையில் முதலிடத்தை பிடித்துள்ளது. IIT மெட்ராஸ் 2வது இடத்திலும், IIT பம்பாய், IIT கரக்பூர்,

IIT தில்லி மற்றும் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் (JNU) ஆகியவை அடுத்தடுத்த இடங்களையும் பிடித்துள்ளது. கல்வி நிறுவனங்களின், கற்பித்தல் மற்றும் கற்றல் வளங்கள், பட்டமளிப்பு விளைவு, கருத்து, உள்ளுணர்வு மற்றும் ஆராய்ச்சித்திறனை அடிப்படையாகக்கொண்டு, தேசிய உயர்கல்வி அங்கீகாரம் (NBA) மூலம் இந்த நிறுவனங்கள் மதிப்பிடப்படுகின்றன. இந்த ஆண்டு, இந்தத்திட்டம் 800 க்கும் மேற்பட்ட புதிய பங்கேற்பாளர்களைகொண்டுள்ளது. மேலும், மருத்துவ மற்றும் சட்டத்தில் சில புதிய பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது தவிர, சென்னை IIT, இந்தியாவின் தரவரிசையில், பொறியியல் பிரிவில் முதலிடத்திலும், IIT பம்பாய் மற்றும் கரக்பூர் அடுத்தடுத்த இடத்திலும் உள்ளன. அதேசமயம், இந்திய மேலாண்மை நிறுவனம் (IIM) அகமதாபாத், மேலாண்மை பிரிவில் முதலிடத்தைப்பிடித்துள்ளது. இத்தரவரிசைகளை மனித வள மேம்பாட்டு அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், புது டில்லியில் ஏப்ரல் 3 2017 அன்று வெளியிட்டார்.

**3. 19வது காமன்வெல்த் வனவியல் மாநாடு எந்த நாட்டில் துவங்கியது?**

A. ஒடிசா

B. அசாம்

C. உத்தரகாண்ட்

D. கேரளா

<u>விடை</u> : C. உத்தரகாண்ட்

19வது காமன்வெல்த் வனவியல் மாநாடு ஏப்ரல் 3, 2017 அன்று “Forests for Prosperity and Posterity” என்ற தலைப்பில் டேராடூன் வன ஆராய்ச்சி மையத்தில் தொடங்கியது. இந்தியா & அயல்நாட்டைச்சேர்ந்த 500க்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள், கல்வியாளர்கள், வன அதிகாரிகள், ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்பு அமைப்புகள் இந்த 5 நாள் மாநாட்டிற்கு வருகைபுரிந்தார்கள். ஐக்கிய நாடுகளின் காமன்வெல்த் வனவியல் சங்கத்துடன் இணைந்து சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றின் மத்திய அமைச்சகத்தை ஒருங்கிணைக்கும் வகையில் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாநாட்டில், காலநிலை

மாற்றம் மற்றும் பசுமையை பாதிக்கும் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்படும்.

**4. 2017 ஆண்கள் ஒற்றையர் மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியில் வென்றவர் யார்?**

**A. Dominic Thiem**

**B. Rafael Nadal**

**C. Milos Raonic**

**D. Roger Federer**

விடை : **D. Roger Federer**

**Roger Federer,** ஒரு சுவிஸ் தொழில்முறை டென்னிஸ் வீரராவார். இவர் **2017** ஆண்கள் ஒற்றையர் மியாமி ஓபன் டென்னிஸ் போட்டியில் வென்றார், **Rafael Nadal**லை **6-3, 6-4** என்ற செட்கணக்கில் இறுதியாட்டத்தில் **US**ன் **Key Biscayne**ல் உள்ள **Crandon Park** டென்னிஸ் மையத்தில் தோற்கடித்தார். இது தவிர, கிரேட் பிரிட்டனின் **Johanna Konta, Caroline Wozniacki**ஐ **6-4, 6-3** என்ற கணக்கில் தோற்கடித்து, **2017**ன் மியாமி ஓபன் - மகளிர் ஒற்றையர் பட்டத்தை வென்றார்.

**5. சமிபத்தில் காலமான கறுப்பின ஆர்ப்பாட்டக்காரர் Darcus Howe, எந்த நாட்டைச்சேர்ந்தவர்?**

**A. UK**

**B. US**

**C.** ஜெர்மனி

**D.** அரியானா

விடை : **A. UK**

இங்கிலாந்தின் லண்டனிலுள்ள பிரிட்டனில் மிகவும் பிரபலமான கறுப்பின ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒருவரான **Darcus Howe (74),** சமிபத்தில் காலமானார். இவரின் சேனல் 4ல் ஒளிபரப்பப்பட்ட **"Black Series"** தொடரின்

மூலம் பிரிட்டனில் புகழ்பெற்றார். இவர் தாரிக் அலி உடன் “Bandung Fil” என்ற நிகழ்ச்சிக்காக இணைந்து பணிபுரிந்தார்.

**6. 2017 (WAAD)உலக ஆட்டிஸம் விழிப்புணர்வு தினத்துக்கான மையக்கருத்து என்ன?**

**A. Autism and the 2030 Agenda: Inclusion and Neuro diversity**

**B. Toward Autonomy and Self-Determination**

**C. Employment: The Autism Advantage**

**D. Sustainable Development: The Promise of Technology**

விடை : **B. Toward Autonomy and Self-Determination**

2017 (WAAD)உலக ஆட்டிஸம் விழிப்புணர்வு தினத்துக்கான மையக்கருத்து “Toward Autonomy and Self-Determination” ஆகும். உலக ஆட்டிஸம் விழிப்புணர்வு தினம் (WAAD), ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 2 அன்று சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரு நாளாக அனுசரிக்கப்படுகிறது. இது மன இறுக்கம் கொண்டவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான உதவியை உயர்த்துவதோடு, அவர்களின் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாகவும் மாற்ற துணைபுரிகிறது.

**7. 2017 UNESCO/Guillermo Cano World Press Freedom பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?**

**A. Ahmet Sik**

**B. Reeyot Alemu**

**C. Dawit Isaak**

**D. Mazen Darwish**

விடை : **C. Dawit Isaak**

2001 செப்டம்பரில் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தியதற்காக கைது செய்யப்பட்ட எரித்ரியன்-ஸ்வீடிஷ் பத்திரிகையாளரான Dawit Isaak, 2017 UNESCO/Guillermo Cano World Press Freedom பரிசுக்கு

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவரது தற்போதைய இருப்பிடம் தெரியவில்லை. கொலம்பிய பத்திரிகையாளரான **Guillermo Cano Isza** ன் நினைவாக $ 25,000 இப்பரிசு வழங்கப்படுகிறது. இவர் 1986ம் ஆண்டு பொகோடாவிலுள்ள எல் எஸ்பிக்டாடர் செய்தித்தாள் அலுவலகத்திற்கு முன்பு படுகொலை செய்யப்பட்டார். ஒவ்வொரு வருடமும் ஒரு தனிநபருக்கோ அல்லது நிறுவனத்துக்கோ இப்பரிசு வழங்கப்படுகிறது. 2017ம் ஆண்டு உலக பத்திரிகை சுதந்திர தினம் (WPFD) கொண்டாட்டம் மே 3 அன்று இந்தோனேசியாவில் ஜகார்த்தாவில் நடத்தப்படும்.

**8. South Asia Sub Regional Economic Cooperation (SASEC) நிதி மந்திரிகள் கூட்டம் எந்த நாட்டில் நடைபெறவுள்ளது?**

A. தென்கொரியா

B. சீனா

C. நேபால்

D. இந்தியா

விடை : D. இந்தியா

(SASEC) நிதி மந்திரிகள் கூட்டம், ஏப்ரல் 3 2017 அன்று, புது டெல்லியில் மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி தலைமையில் நடைபெற்றது. SASEC திட்டத்தின் கீழுள்ள நாடுகளான பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலத்தீவு, மியான்மர், நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய 7 நாடுகளின் நிதி அமைச்சர்கள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) ஆகியோர் இந்தக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வானது உறுப்பினர் நாடுகளின் கருத்துக்களை பரிமாறவும், பரிமாற்றவும் மற்றும் துணை பிராந்தியத்தில் சிறந்த ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கான ஒரு சிறந்த வாய்ப்பாகும். சமீபத்தில், மியான்மர் அதன் 7வது உறுப்பினராக இணைந்துள்ளது.

**9. எந்த மத்திய மந்திரி விசைத்தறித்துறையை ஊக்குவிக்கும் விதமாக “PowerTex India” திட்டத்தை தொடங்கிவைத்தார்?**

A. நரேந்திர மோடி

B. ஸ்மிரிதி ராணி
C. ராஜ்நாத் சிங்
D. அருண் ஜெட்லி

விடை : B. ஸ்மிரிதி ராணி

மகாராஷ்டிராவில் உள்ள பிஹிந்தி மாவட்டத்தில் மின்விசைத்தறி மேம்பாட்டுத்திட்டத்திற்கான விரிவாக்க திட்டத்தை மத்திய ஜவுளித்துறை மந்திரி ஸ்மிரிதி ராணி சமீபத்தில் இந்தியா அறிமுகப்படுத்தியுள்ளார். இந்தியாவில் 45 க்கும் மேற்பட்ட இடங்களில் ஒரே நேரத்தில் இத்திட்டம் துவங்கப்பட்டது, குறிப்பாக சிறிய மின்விசைத்தறி நெசவாளர்களுக்கு இது மிகவும் பயனளிக்கும். 3 வருட திட்டத்தின் நோக்கம், பொது உள்கட்டமைப்பை மேம்படுத்துவதோடு, மின்விசைத்தறித்துறையை நவீனமயமாக்குவதும் ஆகும். சூரிய சக்தியில் இயங்கும் மின்கலங்களை நிறுவுவதற்கான திட்டங்களை இத்திட்டம் கொண்டுள்ளது. இதற்கு மத்திய அரசு 30% மானியம் வழங்குகிறது.

10. Ntangki தேசியப்பூங்கா எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?
A. மிசோரம்
B. நாகாலாந்து
C. மணிப்பூர்
D. திருப்பூர்

விடை : B. நாகாலாந்து

Ntangki தேசியப்பூங்கா நாகலாந்தின் பெரென் மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு வனவிலங்கு பூங்காவாகும். பூங்காவில் அரிதான நீண்ட கைகள் உடைய குரங்கு வகை,கருப்பு நாரை, புனுகுப்பூனை, வெள்ளை மார்புடைய மரங்கொத்தி, புலி, மானிட்டர் பல்லி, புலி, பைதான் பாம்பு, ஸ்லோத் கரடி ஆகியவை உள்ளன. "Ntangki" என்ற பெயர் Zeliangrong பழங்குடி இனத்தின் Zeme என்ற பெயரிலிருந்து பெறப்பட்டது.